பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 09 2025 TUESDAY 12 40 PM

வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. முப்படைகளும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதன் வலிமையை ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை உணர்த்தியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. பிஜேபி மூத்த தலைவர் திரு. விஜய்குமார் மல்ஹோத்ரா உடல்நலக்குறைவு காரணமாக புதுதில்லியில் இன்று காலமானார்.

4. கரூர் சம்பவம் குறித்து ஆய்வு செய்வதற்காக தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள குழுவினர், கரூர், வேலுச்சாமிபுரம் பகுதியில் நெரிசல் ஏற்பட்ட இடத்தை தற்போது பார்வையிட்டு வருகின்றனர்.

5. உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தப் பண்டிகை, நாட்டின் கலாச்சாரம், நம்பிக்கை மற்றும் ஆன்மிக பாரம்பரியத்தை பிரதிபலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த பண்டிகை சமத்துவம். சகிப்புத்தன்மை மற்றும் அன்பை ஊக்குவிப்பதாக கூறியுள்ள குடியரசுத்தலைவர், பெண்களுக்கு சமுதாயத்தில் உரிய மரியாதை கிடைக்கச் செய்ய இந்நாளில் உறுதியேற்போம் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நவராத்திரி மற்றும் மகாஅஷ்டமி பண்டிகை மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் நல்ல ஆரோக்கியத்தை வழங்குவதாக அமையட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட தலைவர்களும் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

நாட்டின் முப்படைகளும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதன் வலிமையை ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை உணர்த்தியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று முப்படைகளின் கருத்தரங்கில் பேசிய அவர். இதன் மூலம் நமது வீரர்களின் திறன் அதிகரிப்பதாகவும் கூறினார்.

ராணுவ வீரர்கள் அவர்கள் பணியாற்றும் காலத்தில் மட்டுமின்றி, எப்போதும் நாட்டை பாதுகாக்கும் சிப்பாய்களாக திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்களது ஒழுக்கமும், தலைமைப் பண்பும் இளையோருக்கு வழிகாட்டும் தன்மையும் பாராட்டத்தக்கது என்று திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

Botswana-வின் சுதந்திர தினத்தை ஒட்டி, அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியா – Botswana இடையேயான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

பிஜேபி மூத்த தலைவர் திரு. விஜய்குமார் மல்ஹோத்ரா, உடல்நலக்குறைவு காரணமாக புதுதில்லியில் இன்று காலமானார். அவருக்கு வயது 93.

தில்லி பிரதேச ஜனசங்கத் தலைவராகவும், அதன்பின் தில்லி பிஜேபியின் முதல் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ள வி.கே. மல்ஹோத்ரா, 5 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை தில்லி சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

புதுதில்லியில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள மல்ஹோத்ராவின் உடலுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அன்னாரது மறைவுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா உள்ளிட்ட தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<

பீகாரில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு திருத்தத்தின் அடிப்படையிலான இறுதி வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடுகிறது.

கடந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பீகாரில் வசிப்பதற்கான ஆவணங்களை சமர்ப்பித்த வாக்காளர்களின் பெயர் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

ஆவணங்களை சமர்ப்பிக்காத அல்லது பீகாரில் தற்போது வசிக்காத 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

கரூர் சம்பவம் குறித்து ஆய்வு செய்வதற்காக தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள குழுவினர், கரூர், வேலுச்சாமிபுரம் பகுதியில் நெரிசல் ஏற்பட்ட இடத்தை தற்போது பார்வையிட்டு வருகின்றனர்.

முன்னதாக, கரூர் செல்லும் வழியில் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி. ஹேமமாலினி, சம்பவ இடத்தை தங்களது குழுவினர் நேரில் பார்வையிட உள்ளததாக கூறினார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறுவதுடன், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரையும் சந்தித்து, சம்பவம் குறித்து கேட்டறியவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டாவிடம் அறிக்கை அளிக்கவிருப்பதாகவும் திருமதி. ஹேமமாலினி கூறினார்.

இக்குழுவில் இடம்பெற்றுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர் பேசுகையில், நெரிசல் ஏற்பட்டதற்கான காரணம் குறித்து தங்களது குழு ஆராயவுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய முதியோர் தினம் நாளை கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, சென்னை கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனையில் இன்று சிறப்பு மருத்துவ முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான மகளிர் - வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ், நடைபெறும் இந்த முகாமில் அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம் என்று அந்த மருத்துவமனையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் தீபா 48 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

முப்படை வீரர்களின் ஆரோக்கியத்தை பேணிக் காப்பதில் ராணுவ செவிலியர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ராணுவ செவிலியர் சேவையின் 100வது ஆண்டு விழாவை தொடங்கி வைத்து பேசிய அவர். வீரர்களின் தன்னம்பிக்கையை அதிகரிப்பதிலும் ராணுவ செவிலியர்களின் பங்களிப்பை பாராட்டினார்.

இந்தப் பிரிவில் பணியாற்றும் செவிலியர்கள் ஒழுக்கம், அர்ப்பணிப்பு மற்றும் கண்ணியத்துடன் தங்களது சேவைக்கு பெருமை சேர்ப்பதாகவும் ஜென்ரல் அனில் சௌஹான் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

குஜராத் மாநிலத்தின் சௌராஷ்ட்ரா மற்றும் கட்ச் பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், அஸ்ஸாம், மேகாலயா, சத்திஷ்கட், ஒடிசா, மிஸோரம், நாகாலாந்து, திரிபுரா மற்றும் கடலோர ஆந்திராவில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கன், கோவா. மஹாராஷ்ட்ரா மற்றும் ராஜஸ்தானில் அடுத்த 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தலைநகர் தில்லியில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக, தில்லியில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

2025ஆம் ஆண்டுக்கான விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது.

தகுதிவாய்ந்த விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு அமைப்புகள் தங்களது விண்ணப்பத்தை விளையாட்டுத்துறை இணையதளத்தில் அடுத்த மாதம் 28ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் வீரர்களுக்கு மேஜர் தியான்சந்த் கேல் ரத்னா விருது, அர்ஜூனா விருதுகளும், பயிற்சியாளர்களுக்கு துரோணாச்சார்யா விருதும் வழங்கப்படும்.

>>>>>><<<<<<

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில், Rinku Hooda தங்கப்பதக்கத்தையும், Sunder Singh Gurjar வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் வட்டு எறிதல் பிரிவில் Yokesh Kathuniya வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது

முதல் ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் விமல்ராஜ் அண்ணாதுரை – ஸ்ரேயா பாலாஜி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-3, 21-2 என்ற செட்கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்டின் Sultan Salim - Lujain Asem இணையை வென்றது.

>>>>>><<<<<<

உலக கோப்பை ஐஸ் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Avikshit தகுதி பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<